**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13(2019) | பரத நாட்டியம் - I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **சரியான விடையினை தெரிவு செய்து புள்ளித்தாளில் புள்ளடி இடுக.**

01) வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கொண்டு ஆடப்படும் கிராமிய நடனம்.
1) ஒயிலாட்டம் 2) பொம்மலாட்டம் 3) குதிரையாட்டம்
4) ஏந்தல் நடனம் 5) காவடியாட்டம்

02) அண்ணலும் நோக்கினாள். அவளும் நோக்கினாள் என்ற பாடல் அடியை உடைய காவியம்.
1) புராணங்கள் 2) இராமாயணம் 3) மகாபாரதம்
4) மணிமேகலை 5) சிலப்பதிகாரம்

03) 1936ம் ஆண்டு அடையாரு பிரமஞான சங்கத்தின் அறுபதாம் ஆண்டு விழாவின் போது சர்வதேச கலைக் கழகமாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் பின்வரும் எப்பெயருடன் தற்போது விளங்குகிறது.
1) வட இலங்கைச் சங்கீத சபை 2) சங்கீதவத்துவ சபை
3) கலாஷேத்திரம் 4) இராமநாதன் நுண்கலைபீடம்
5) விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகம்

04) வீணையில் சுருதிக்காக தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் எவ்வாறு அழைக்கப்படும்.
1) பஹுத்வனி வாத்தியம் 2) நிஸ்கள வாத்தியம் 3) வைணிகர் வாத்தியம்
4) சகல வாத்தியம் 5) மங்கள வாத்தியம்

05) திஸ்ரஜாதி திரிபுடைதாளம் கண்டகதி அடையும் போது எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை.
1) 35 2) 40 3) 45 4) 55 5) 65

06) கண்டிகைகளாக வகுக்கப்பட்ட உருப்படியை இயற்றியவர்.
1) பாரதியார் 2) ஜெயதேவர் 3) பாபநாசம் சிவன்
4) திருவள்ளுவர் 5) காரைக்குடி சாம்பசிவம்

07) சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பட்டம்.
1) கலைமானி 2) நாட்டிய மணி 3) கல்வி மானி
4) இளங்கலைமாணி 5) இசை மானி

08) குற்றால குறவஞ்சி என்ற நடன நாடகத்தை எழுதியவர்.
1) கவிமணி வீரமணி ஐயர் 2) கோபால கிருஷ்ண பாரதியார்
3) திரிகூடராசப்பக் கவிராயர் 4) அருணாசலகவிராயர்
5) வேங்கடமகி

agaram.lk

09) முதலாவது மண்டியடவினை ஒரு தரம்செய்யும் பாதபேதம்.
1) ஜந்தரம் 2) மோடிதம் 3) சமசூசி
4) ஆயதம் 5) காருடம்

10) சிருங்கார ரஸத்தை மையமாகக் கொண்ட நாட்டிய உருப்படி.
1) ஜாவளி 2) தில்லானா 3) ஜதீஸ்வரம் 4) அலாரிப்பு 5) சப்தம்

11) தெய்வங்களிடமிருந்து நன்மைபெறும் நோக்குடன் ஆடப்படும் சப்ரகமுவ நடன மரபு.
1) முவ்மாத்ரய 2) யாதினி மாத்ரய 3) சிந்து மாத்ரய
4) பட்டுதல் மாத்ரய 5) யக்பத மாத்ரய

12) மாட்டுவண்டிச் சத்தம், தெம்மாங்கு ஓசை ஆகிய ஒலிப்பின்னணியில் காட்டப்படும் இடம்.
1) ரயில் நிலையம் 2) நகர்புறம் 3) சேரிப்புறம்
4) கிராமப்புறம் 5) சுடுகாடு

13) பல்வேறுபட்ட முகமூடிகள் அணிந்து பல கதா பாத்திரங்களை உள்ளடக்கி குறிப்பிட்ட செய்தியை மக்களுக்கு அளிக்கும் சப்பிரகமுவ நடன மரபு.
1) மடு 2) கோலம் 3) சொக்கரி 4) வண்ணம் 5) கூத்து

14) பாடகர் சபையோர் மெச்சும்படிபாட பெண்கள் அபிநயிக்கும் வாச்சிகம்.
1) உபகீத வாச்சிகம் 2) சுசப்த வாச்சிகம் 3) சுகித வாச்சிகம்
4) உபசப்த வாச்சிகம் 5) நிசப்த வாச்சிகம்

15) நாயகன் நாயகி பாவத்தை வெளிப்படுத்தும் நாட்டிய உருப்படி.
1) அஷ்டபதி 2) கீர்த்தனை 3) பதம்
4) தில்லானா 5) ஜதீஸ்வரம்

16) வட இலங்கை சங்கீத சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
1) 1928 2) 1930 3) 1945 4) 1931 5) 1920

17) செண்டை எனும் வாத்தியத்தை பயன்படுத்தும் சாஸ்திரிய நடனம்.
1) கதக் 2) கதகளி 3) ஒடிசி
4) மணிப்புரி 5) பரத நாட்டியம்

agaram.lk

18) சர்வதேச நடன தினம் கொண்டாடப்படும் நாள்.
1) சித்திரை 29 2) மாசி 12 3) தைமாதம் 19
4) சித்திரை 12 5) மார்கழி 20

19) கரணங்கள் முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட ஆலயம்.
1) காஞ்சி 2) சாரங்க பாணி 3) மதுரை மீனாட்சி
4) பிரகதீஸ்வரர் 5) நாராயணன் ஆலயம்

20) பாரி ஜாத பஹரணம் என்னும் காவியத்தை படைத்தவர்.
1) மகேந்திர வர்மன் 2) சித்தேந்திர யோகி 3) மகேந்திர வர்மன்
4) வள்ளத்தோல் 5) சரபோஜி மகாராஜா

21) பரதநாட்டியக் கலையை மீண்டும் தனக்குரிய மதிப்பை பெறும்படி செய்த ஸ்தாபனம்.
1) சங்கீத வத்துவசபை 2) சங்கீத சபை 3) பிரம ஞான சபை
4) அண்ணாமலை மன்றம் 5) வட இலங்கைச் சங்கீத சபை

22) கதகளி நாட்டிய நாடகத்தில் சூர்ப்பனைக்கு போடப்படும் வேஷம்.
1) மினுக்கு 2) பச்சை 3) தாடி 4) கத்தி 5) கரி

23) ஒடிசி நடனத்தின் தொடக்கத்தில் போற்றி துதிக்கப்படும் தெய்வம்.
1) சிவன் 2) பார்வதி 3) கணபதி 4) ஜெகன்நாதர் 5) சரஸ்வதி

24) தாய்க்கும் சேய்க்கும் இடையிலான உறவைக் குறுக்கும் பாவம்.
1) சாக்கிய பாவம் 2) வாத்சல்யபாவம் 3) மதுரபாவம்
4) காந்த பாவம் 5) தாஸ்ய பாவம்

25) சொல்லிலும் நடத்தையிலும் சாதுரியம் உடையவர்.
1) குப்தை 2) விதத்தை 3) லசிதை 4) குவடை 5) முதிரை

26) நந்திகேஸ்வரரின் அபிநயதர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1917 இல் நியூயோக்கில் வெளியிட்டவர்.
1) வீரராகவையன் 2) ராம் கோபால் 3) கவிஞர் வள்ளத்தோல்
4) ரவீந்திரநாத் தாகூர் 5) கலாயோகி ஆனந்தகுமாரசாமி

27) கலாஷேத்திராவில் பரதம் பயின்ற முதல் இலங்கைப் பெண்மணி.
1) கமலஜோன் பிள்ளை 2) சாந்தா பொன்னுத்துரை 3) கனகசபை ராணி
4) பாலசுந்தரி 5) லீலாம்பிகை செல்வராஜா

28) இலங்கையின் எப்பகுதியில் நாட்டுக் கூத்து பாதுகாக்கப்படுகிறது.
1) மாத்தளை 2) மட்டக்களப்பு 3) பொலநறுவை
4) வவுனியா 5) அநுராதபுரம்

29) தன்னைச் சார்ந்த எல்லா ஸ்திகளுடனும் சமமான பிரியத்துடன் இருப்பவள்.
1) திருஷ்டன் 2) ஷடன் 3) அனுகூலன்
4) தக்சினன் 5) விடன்

30) ரௌத்திர ரஸத்தின் எதிர் ரஸம்.
1) பயானகம் 2) ஹாஸ்யம் 3) வீரம்
4) அற்புதம் 5) சிருங்காரம்

31) 72 மேளகர்த்தா ராகங்களின் ஸ்தாபகர்.
1) வேங்டமகி 2) முத்துசாமி தீட்சிதர் 3) நந்திகேஸ்வரர்
4) பொன்னையா 5) ஊத்துக்காடு வெங்கட சுப்பையர்

agaram.lk

32) 1956ம் ஆண்டில் பத்மபூஷன் விருது பெற்ற நடன விற்பன்னர்.
1) வழுவூர் இராமையாப் பிள்ளை 2) தண்டாயுதபாணிப் பிள்ளை
3) ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் 4) ஸ்ரீ.த. பாலசரஸ்வதி
5) கனம் கிருஷ்ணய்யர்

33) அபிநயத்தில் விலங்குகள், பறவைகளின் மொழியைக் குறிக்கும் பாஷை.
1) ஆதி பாஷை 2) ஆர்ய பாஷை 3) ஜாதி பாஷை
4) பூன்யந்தரி பாஷை 5) திராவிட பாஷை

34) நாட்டிய சாஸ்திரத்தில் தாளக்கருவிகள் பற்றி கூறும் அத்தியாயம்.
1) 2வது 2) 35வது 3) 36 வது 4) 27வது 5) 34 வது

35) பொதுமக்களுக்காக ஆடப்படும் கூத்து.
1) புறக்கூத்து 2) அகக் கூத்து 3) பாண்டரங்கம்
4) பொதுவியல் 5) வேதியல்

36) சிருங்கார விடயத்திலும் காம சாஸ்திரத்திலும் கைதேந்தவர்.
1) சடன் 2) சேடன் 3) விடன் 4) பீடமார்த்தனன் 5) விதூசகன்

37) மேடையின் ஒளியூட்டலில் பக்கங்களில் இருந்து ஒளி பாய்ச்சப்படும் போது நிழல்விழாது தவிர்ப்பது.
1) அலை 2) குவிவு 3) செறிவு 4) திரை 5) வர்ணம்

38) மங்களச் சரணம் என்ற உருப்படி அமைந்த சாஸ்திரிய நடனம்.
1) ஒடிசி 2) மணிப்புரி 3) கதக் 4) கதகளி 5) மோகினியாட்டம்

39) மயிலாப்பூர் கௌரியம்மாள் என்பவரை முதல் நாட்டிய குருவாக கொண்டு நடன வித்தை கற்றவர்.
1) பத்மா சுப்பிரமணியம் 2) பால சரஸ்வதி 3) ருக்மணிதேவி
4) கனக்றெலே 5) சாந்தா பொன்னுத்துரை

40) நாயகன் தேசாந்தரம் போயிருக்கும் காலத்தில் வருந்தப்படுகின்ற நாயகி.
1) கண்டிதா 2) கலஹாந்தரிதா 3) பிரோஷிதபாத்ருகா
4) விப்ரலப்தா 5) வாஸகஸஞ்சிகா

41) பயானக ரஸத்திற்குரிய நிறம்.
1) வெள்ளை 2) கருமை 3) நீலம் 4) மஞ்சள் 5) சாம்பல்

42) அபிநய தர்ப்பணத்தில் அனுசாயி எனக்குறிப்பிடப்படும் அபிநயம்.
1) ஆங்கிகம் 2) சாத்விகம் 3) ஆஹார்யம்
4) வாசிகம் 5) ஸ்வேதம்

43) வயலும் வயல் நிறைந்த பகுதிகளில் ஆடும் குரவை.
1) குன்றக் குரவை 2) பாலை நிலக்குரவை 3) முல்லைக் குரவை
4) மருதநிலக்குரவை 5) நெய்தல் நிலக்குரவை

44) வீணா வித்யாதர என்ற விருதுப் பெயர் பெற்ற மன்னன்.
1) இராஜராஜசோழன் 2) நாயக்க மன்னன் 3) சோழ மன்னன்
4) நவாஜெரீப் மன்னன் 5) ராஜ சிம்மன்

45) நாயக்கர் கால ஓலைச்சுவடிகளின் களஞ்சியமாக விளங்குவது.
1) கேரளா சரஸ்வதி மஹால் 2) மணிப்புரி சரஸ்வதி மஹால்
3) தஞ்சை சரஸ்வதி மஹால் 4) ஒரிசா சரஸ்வதி மஹால்
5) வட இந்தியா சரஸ்வதி மஹால்

agaram.lk

46) இலங்கையின் மலையக மக்களால் ஆடப்படும் காமன் கூத்தில் வாசிக்கும் வாத்தியம்.
1) சங்கு 2) சேமக்கலம் 3) தப்பட்டை 4) மிருதங்கம் 5) முகவீணை

47) வர்ணத்தின் உத்தராங்கப் பகுதிகள்.
1) பல்லவி, சரணம் 2) பல்லவி, அனுபல்லவி 3) சரணம், சரணஸ்வரம்
4) முத்தாஸ்வரம், சரணம் 5) பல்லவி, சரணஸ்வரம்

48) சாக்கையர்களின் ஆற்றுகைகளுடன் தொடர்புபட்டது.
1) சாந்திக் கூத்து, விநோதக்கூத்து 2) பிரபந்தக் கூத்து, கூடியாட்டம்.
3) விநோதக் கூத்து, பிரபந்தக் கூத்து 4) கூடியாட்டம், சாந்திக் கூத்து
5) விநோதக் கூத்து, கூடியாட்டம்.

49) கலாஷேத்திராவில் கற்பிக்கப்படும் இரு சாஸ்திரிய நடனங்கள்.
1) கதக், கதகளி 2) கதக், மணிப்புரி 3) பரதம், மணிப்புரி
4) கதகளி, பரதம் 5) கதகளி, ஒடிசி

50) கொஹோம்பகங்கரியா என்னும் சடங்கினை மையமாகக் கொண்ட இலங்கையின் சாஸ்திரிய நடனம்.
1) றுகுணு நடனம் 2) கண்டிய நடனம் 3) சப்பிரகமுவ நடனம்
4) தாழ்பிரதேச நடனம் 5) கரையோர பிரதேச நடனம்.

(50 x 2 = 100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | பரத நாட்டியம் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி II

❖ **பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1) நீர்கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், நாயகன், நாயகி தருக. (2 புள்ளிகள்)
2) வர்ணத்தின் இலட்சணம் எழுதுக. (4 புள்ளிகள்)
3) நீர்கற்ற வர்ணத்தின் 2வது சரணஸ்வரக் கோர்வையை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக. (6 புள்ளிகள்)
4) நீர்கற்ற வர்ணத்தின் அனுபல்லவிக்குரிய 2வது தீர்மானத்தை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக. (8 புள்ளிகள்)

02. 1) ஒயிலாட்டம், பொம்மலாட்டம், குதிரையாட்டம், ஏந்தல் நடனம் ஆகிய கிராமிய நடனங்கள் எச்சந்தர்ப்பத்தில் ஆடப்படுகிறது. (4 புள்ளிகள்)
2) மேற்குறிப்பிட்ட நடனங்களின் ஆடல் முறையினை எழுதுக. (10 புள்ளிகள்)
3) இவற்றிற்கு பயன்படுத்தும் ஆடை, வேறு அலங்கார உபகரணங்களை பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)

03. 1. அஷ்டவித நாயகிகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2. அஷ்டவித நாயகிகளின் குண இயல்புகளை விளக்குக. (16 புள்ளிகள்)

### பகுதி – II

04. ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தருக. (20 புள்ளிகள்)

05. சிறுகுறிப்பு எழுதுக.
1) காமன் கூத்து
2) சொக்கரி
3) சங்கு
4) கூத்தனார் (4 x 5 = 20 புள்ளிகள்)

agaram.lk

06. தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களில் ஒன்றான மோகினி ஆட்டம் பற்றி பின்வரும் விடயம் கருத்தில் கொண்டு விளக்குக.

1) தோற்றம் வளர்ச்சி (8 புள்ளிகள்)

2) ஆட்ட முறை (5 புள்ளிகள்)

3) இசைக்கருவி (3 புள்ளிகள்)

4) ஆடை அணிகலன்கள் (4 புள்ளிகள்)

07. விபுலானந்தா இசை நடனக்கல்லூரி கலைகள் வளர்க்கும் விதம் பற்றியும் அதன் தோற்றம், வளர்ச்சி பற்றி குறிப்பிடுக. (20 புள்ளிகள்)

08. 1. பின்வரும் எண்ணிக்கை கொண்ட தாளங்கள், ஜாதி, கதி என்பவற்றைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் 2 தாளம், ஜதி, கதி குறிப்பிடுக.

1) 1. 81 2. 24 3. 72 4. 84

(4 x 4 =16 புள்ளிகள்)

2) பின்வரும் தாளங்களின் எண்ணிக்கையைத் தருக.

1. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் சங்கீரண கதி.
2. கண்ட ஜாதி ஜம்பை தாளம் மிஸ்ர கதி.
3. சதுஸ்ரஜாதி அட தாளம் திஸ்ர கதி.
4. மிஸ்ரஜாதி துருவதாளம் சதுஸ்ர கதி.

(4 x 1 = 04 புள்ளிகள்)

agaram.lk